விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார றோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம் செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

அசலும் நகலும்
உங்கள் அபிமானத்துக்குரிய மில்க்வைற் வி. எம். கே. பரர்சோப் தரமானது. ஆனால் அதன் அமைப்பில் வேறு சிலர் மேலுறை சுற்றி விற்பனை செய்கிறார்கள். மில்க்வைற் வி. எம். கே. தயாரிப்பு என்று எழுதிய எங்கள் மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள். நன்றி
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

மலர் 31 | ஆவணி 24 | ஷவ்வால் 16 | ஞாயிற்றுக்கிழமை | (9—9—79) | இதழ் 209

### நாடு பூராவும் மேலதிகமாக
# 14 தொழில் நுட்ப கல்லூரிகள்
## ஞானலிங்கம் குழு சிபார்சு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மேலதிகமாக 14 தொழில் நுட்பக் கல்லூரிகளை நிறுவவேண்டும்.

மொறட்டுவ பல்கலைக் கழகத்துடன் இணைந்ததாக தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்விச் சேவை ஒன்றை ஆரம்பித்தல்.

'ஞானலிங்கம் குழு' அரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கண்ட சிபார்சுகளை தெரிவித்துள்ளது.

தொழில் நுட்பக் கல்வி குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட 'ஞானலிங்கம் குழு' அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வேறு சிபார்சுகள் வருமாறு:

இப்போதிருக்கும் பல் தொழில் நுட்பக் கல்லூரிகளும் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையங்களும் தொழில் நுட்பக் கல்லூரிகள் எனப் பெயர் மாற்றப்படவேண்டும்.

தொழில் நுட்பக் கல்லூரிகளின் ஆங்கிலப் பயிற்சித் திட்டங்கள் மறுசீரமைக்கப்படவேண்டும். (இ)

# இந்திய தேர்தல் ஒத்திவைப்பில்லை
## சட்டமந்திரி அறிவிப்பு

ஐதராபாத், செப். 8

இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எதிர் வரும் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என அறிவிக்க வேண்டும்.

மாருதி விவகாரம் குறித்த குப்தா விசாரணைக்கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் அவர் மீது வழக்குத் தொடர வேண்டும்.

குப்தா கமிஷன் அறிக்கையில் ஏதாவது விருந்தால் உண்டென்றால் அந்த அறிக்கையின் அடிப்படையில் திருமதி காந்தி மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்.

எதிர்வரும் இடைக்காலத் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசுக்கு கிடையாது. எக்காரணம் கொண்டும் இவ்

[10-ம் பக்கம் பார்க்க]

கார் விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட வொக்ஸ்வகன்–1300(VW 1300MODEL-1974) 1974 மொடல் – 9ஸ்ரீ – புதிய நிலையில் உள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.

8, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 3525

திருமண அழைப்பு

| மணமகன் | மணமகள் |
| --- | --- |
| ச. கனகசபை | சி. கனகரத்தினம் |
| தம்பதிகளின் புத்திரன் | தம்பதிகளின் புத்திரி |
| செல்வன் நடராசா | செல்வி மகேஸ்வரி |
| (விரிவுரையாளர் பேராதனைப்பல்கலைக்கழகம்) | (விவசாயப்போதனாசிரியை பேராதனை) |

12-9-79 புதன்கிழமை காலை 6-28 முதல் 8-04 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நல்லூர் சிவன் கோவிலில் திருவருளால் நிகழவிருக்கும் திருமணத்தின்போது சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் உறவினரையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (தயவு செய்து இதனையே பொதுவான அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

இங்ஙனம்

| | |
| --- | --- |
| ச. கனகசபை | சி. கனகரத்தினம் தம்பதிகள் |
| எழுதுமட்டுவாழ் வடக்கு, | (இளைப்பாறிய விவசாய உப அத்தியட்சகர்) |
| எழுதுமட்டுவாழ். | இல 200, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். |
| (3504) | |

## ஜே. ஆர். ஜப். பயணம்

ஹவானா, செப். 8

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஹவானாவில் நடைபெற்ற 6வது அணிசேரா இயக்க மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு இன்று அங்கிருந்து ஜப்பானுக்குப் பயணமானார். (இ)

## எம். ஜி. ஆர். ஜனாதிபதியை சந்தித்தார்

புதுடில்லி, செப். 8

தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று டில்லியில் இந்திய ஜனாதிபதி திரு. நீலசஞ்சீவரெட்டியைச் சந்தித்தார். (இ)

குறிஞ்சிக் குமரன் கோவில்
பேராதனைப் பல்கலைக்கழகம்

குறிஞ்சிக் குமரன் கோவில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது ஆலயவிமானங்கள் புதுப்பிக்கப்பட்டு அடுத்த ஆண்டு முற்பகுதியில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. திருப்பணியை முற்றுவிக்க இரண்டு லட்சம் ரூபா வரை வேண்டியுள்ளது சைவாபிமானிகளை சிறப்பாகப் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை- தம்மால் இயன்றபொருளுதவி புரியுமாறு வேண்டிக்கொள்கிறோம். காசோலைகள் காசுக் கட்டளைகள் KURINCHIK KUMARAN TEMPLE கணக்கிற்கு எழுதி DR. R. KUMARAVADIVEL, Dept. of Physics, University of Peradeniya என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

பொறுப்பாண்மைக்குழு
3522

சாமுவேல் சண்ஸ் அன் கொம்பனி லிமிட்டட்

எமது வாடிக்கையாளர்கட்கு நாம் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருவதாவது: எமது ஸ்தாபன விரிவாக்கலின் கீழ் எல்லாவிதமான வார்ப்பு வேலைகளும், கதவுப் பூட்டுகள். லாச்சிப் பூட்டுகள் மற்றும் எல்லாவிதமான பூட்டு வகைகளும், பித்தளை, அலுமினியம் ஆகியவற்றாலான பொருட்களுக்கும் ஓடர் எடுக்கப்படும்.
சிறந்த பொருட்களை உத்தரவாதத்துடனும் குறைந்த விலையிலும், குறித்த நேரத்திலும் பெற நாடுங்கள்.

சாமுவேல் சண்ஸ் அன் கொம்பனி லிமிட்.
யூனியன் பவுண்டறி இன்ஜினியரிங் வேக்ஸ்

செம்மணி வீதி — நல்லூர்.
3498

## கணக்கப்பிள்ளை தேவை

வட்டிக்கடையில், ஐந்து வருட அனுபவமுள்ள கணக்கப்பிள்ளை தேவை. நகைகள் பற்றிய அனுபவம் அவசியம். வட்டிக்கடை அனுபவம் ஒழுக்கம்பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 45 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பப்படுவர்

முகாமையாளர், [பிரத்தியேக] சி. எஸ். கே. ஒயில் மில்ஸ், 11, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3528

## வசந்தா வஸ்திராலயம்

இலக்கம் 20, (மேல்மாடி) மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்

0 பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான சீருடை (Uniforms) ரையிஸ் (Ties) தையல்செய்ய,

0 குழந்தைகள், பிள்ளைகளின் சட்டைகள், பெண்களின் ஆடைகள் நவீனமுறையில் தையல் செய்ய,

0 கோயில்களுக்குத் தேவையான திரைச்சீலைகள் வரைதல், பிறின்ரிங்செய்ய,

0 துணிவகைகள் சாயமிட, பிறின்ரிங்செய்ய,

**நீண்டகால அனுபவமும் திறமையுமிக்க சிறந்த ஸ்தாபனம்-**

**விஜயம் செய்யுங்கள்!**

## WANTED

### Chartered Or Cost Accountant

For our client, an Industrial Concern in the North. With a minimum of three years' experience in Industry

or

Intermediate Chartered or Equivalent with five years experience in Industry

Attractive emoluments for the right person

Applications close on 24th September, 1979.

Please inform qualified friends and relatives

APPLY To:

**Consultancy & Finance & Development Ltd.,**

129, TEMPLE ROAD — JAFFNA.

## Jaffna College

Has pleasure in inviting you to its

**Annual Prize Giving**

on Wednesday, 19th September, 1979 at 5-30 p. m

PROFESSOR K D ARUDPRAGASAM, B Sc, Ph D

Professor & Head of Department of Zoology, University of Colombo will be the Chief Guest

MRS W R HOLMES will distribute the prizes

Vaddukoddai 4-9-1979. A KADIRGAMAR Principal 3514

### விற்பனைக்கு

அரிசி ஆலையுடன் காணி கொள்வில் ஆதனம் 18 பரப்பு. பலன்தரும் பிரயோசனங்களுடன். கடைமறைகள் கட்டடங்களும் அரிசி, மாவு மில், நெல் கொள்வனவுக்கும். தியேட்டர் அமைக்கவும் சிறந்த இடம் மின்சார நிலையத்திற்கு அண்மையில் பார்வையிட்டு விலை கோரவும்.

A K விநாயகமூர்த்தி மில், மெயின் வீதி, முள்ளியவளை 3532

கோண்டாவில் கிழக்கில் புகையிரத வீதியில் தபாற் கந்தோர், ஆஸ்பத்திரி, பாடசாலை, பிள்ளையார்கோவில் அண்மையில் கிணற்றுடன் சுற்றுமதில் கட்டப்பட்ட காணி 5 1/2 பரப்பு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும்; சண்முகநாதன், 28, பலாலி வீதி [இலுப்பையடிச் சந்தி], யாழ்ப்பாணம். 3542

### பயிற்சி

எம்மிடம் தரமான பயிற்சிப் புத்தகங்கள் உள்ளன ஒவ்வொன்றும் 100 தாள்களையும் 200க்கு மேற்பட்ட பக்கங்களையும் உள்ளடக்கியது அச்சுப் பதிப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. "தமிழ் ஆங்கில டிக்சனரி", "ஸ்போக்கன் இங்கிலீஸ்" [தமிழ்மூலம் ஆங்கிலம்], "சுப்பர் ஸ்போக்கன் சிங்களம்" [தமிழ்மூலம் சிங்களம்] ஒவ்வொரு புத்தகத்திலும் உரையாடல்கள், கதைகள், கடிதங்கள், கட்டுரைகள், விடுவிடைகள் போன்றவற்றுடன் 500க்கு மேற்பட்ட அன்றாட பாவனைச் சொற்களையும் உள்ளடக்கியுள்ளது மற்றும் க. பொ. த (உயர் தரத்திற்கான) பௌதிகவியல் கணிதத்துக்கும் தூயும், அளவையியல், இரசாயனம், கணக்கியல், விஞ்ஞானம் போன்ற பாடங்களின் வினா/விடைகளையும் உள்ளடக்கியது ஒவ்வொன்றிலும் 100க்கு மேற்பட்ட வினா/விடைகள் உள்ளன, ஒவ்வொரு புத்தகத்தின் விலையும் [தனித்தனியே] ரூபா 12-50 மட்டுமே வி பி பி உண்டு. இவை அனைத்தும் பட்டதாரி ஆசிரியர்களின் கூட்டுத் தயாரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது அத்துடன் தபால்மூலமும் க பொ. த. [சாதாரண] புதிய கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களும் கற்றுக் கொடுக்கப்படும் தொடர்புகளுக்கு! PUBLISHER'S, 77, Centre Road, Colombo-15. 3533

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மானிப்பாய், லோட்டன் வீதியில் பெரிய கட்டிடம் மட்டும் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு திரு W. T. லோரன்ஸ், அதிகாரி செல்லமுத்து வீதி. மானிப்பாய் 3523

நல்நிலைமையிலுள்ள 5 SRI 6264 X 150 CC லம்பிறட்டா [ஸ்கூட்டர்] விற்பனைக்குண்டு விலை நேரில் சு. சுந்தரராசா வடக்கம்பரை அம்மன் கோவிலடி, சுளிபுரம் 3538

ஊர்காவற்றுறையில் சுமார் 150 பரப்புக்காணியும் அதனுள் மாடிவீடும் விற்பனைக்குண்டு மேலும் வீடுகட்டவோ அல்லது தொழிற்சாலை போடவோ கூடிய வெளியிடம் உண்டு. நியாயமான விலையில் வாங்கலாம்தொடர்புகொள்க சி. எஸ். கே. ஸ்தாபனம் 11 (133) கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 3526

கீரிமலை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் 25 பரப்பளவில் வீடுகட்டக்கூடிய வெறுங்காணிவிற்பனைக்குண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்க சி. எஸ். கே ஸ்தாபனம் 11, (133) கே. கே எஸ். ரோட் யாழ்ப்பாணம். 3527

முருங்கனில் வவுனியா மன்னார் மெயின் வீதிக்கு அண்மையில் சிறந்த நீர்ப்பாசன வசதிகளுடன் ஒவ்வொன்றும்பத்து பன்னிரண்டு ஏக்கர்வரை விஸ்தீரணமான இரு நெற்காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் மு. துலசிதாஸ், மணல் தெரு, கப்பர் மலை, வல்வெட்டித்துறை. 3529

33 ஸ்ரீ 33-9 இலக்க A-55 டிலிவரி வான் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. பார்வையிடலாம் 163, பிரதான வீதி, நீர்கொழும்பு போன்; 2490 (3510)

நல்ல நிலையில் உள்ள 8 ஸ்ரீ தொடர் வெலோசொலக்ஸ் விற்பனைக்குண்டு விலை 3700/-க்கு மேல். வடமராட்சி புத்தகசாலை. பருத்தித்துறை 3543

கப்பர் Type C. V. R 5, அதிவேக 5 குதிரை பலமுள்ள புதிய டீசல் இயந்திரம் தற்பொழுது எம்மிடம் விற்பனைக்கு உண்டு. 3" அல்லது 2" பம்முடன் இணைத்துக் கொடுக்கப்படும். திருச்செல்வம் அன் கொம்பனி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 561. [3544]

ஒஸ்ரின் சோமசெற் 10 ஸ்ரீ தொடர் இரண்டுகார்கள் உள்ளது நிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்! எஸ் ஜெயராசா, பொன்னர் வளவு தொல்புரம், சுழிபுரம். 3516

A 70 மொடல் CN 1640 இலக்கமுடைய நல்ல நிலைமையிலுள்ள கார் வானுக்கு [Van எல்லாத் தேவைகளுக்கும் மாற்றலாம். 22, Alwis Place Colombo-13. 3519

300 அக்பியர் என்ஜினும் இயக்கும் வெல்டிங் டைனமோ வண்டியுடன், என்ஜின் இல்லாமல் விற்பனைக்குண்டு இல: 9, தேவாலய ஒழுங்கை, சாவகச்சேரி. 3518

### தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் தண்ணீர், மின்சாரம், கார் கரஜ் வசதிகளுடன் வீடு விலைக்கு தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 3541 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 3541

யாழ்ப்பாண வளாக கலைப்பிரிவுக்குத் தெரிவான மாணவர், கொழும்பு வளாகத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். தொடர்புக்கு: சி ஆறுமுகம், 25 சுங்க வீதி, திருகோணமலை 3520

மாணவர் ஒருவருக்கு யாழ். நகருக்குள் தங்கி பயில்வதற்கு விடுதி வசதி உடன் தேவை. உணவு வசதி இருப்பின் விரும்பத்தக்கது. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல; 3536 C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 3536

### பயிற்சி

3 மாதகால பொது விவசாயப்பயிற்சி 16-22 வயதுடைய இளைஞர்கட்கு அளிக்கப்படும். இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்! அதிபர், விவசாய நிறுவனம், யாழ். க. தொ. நு & வி;நி. மருதனார்மடம், சுன்னாகம். 3511

### பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம ஆண்டுவிழா

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் 10வது ஆண்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாலை 5-30க்கு ஆரம்பமாகும் இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திர துரைசுவாமி கலந்து கொள்வார்.

திரு. கே, நடனசபாபதி வரவேற்புரை நிகழ்த்துவார். ஆச்சிரம பொதுச்செயலாளர் பிர. இரத்தினசபாபதி "இராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாறு பற்றி உரையாற்றுவார்.

6-30க்கு ஸ்ரீ இராமகிருஷ்ணரின் திரைப்படமும் காண்பிக்கப்படும்

விழாவையொட்டிய சிறப்பு மலர் 4ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

### இன்று கிளரன்ஸ்

#### அடிகளுக்கு பாராட்டுவிழா

"என்னுடையவை யாவும் உங்களுடையவை" எனும் சிறந்த கிறிஸ்தவக் கோட்பாட்டிற்கு அமைய யாழ் புனித மரியாள் பேராலயத்தில் பணியாற்றி வந்த அருட்திரு கூஞ்சே கிளரன்ஸ் அடிகள் சரம்பொன் ஆலயத்திற்கு மாற்றலாகிச் செல்வதையொட்டி இன்று மாலை

[9-ம் பக்கம் பார்க்க]

Brownson

வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா

பிரவுண்சன் அரறூட் மா அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

## மக்ஸல் கசெற்

MAXELL CASSETTE

Only Cassette with Head Cleaner from Japan

ஏக இறக்குமதியாளர்கள்:

**வில்லியம் ரேடிங் கம்பனி**

கொழும்பு

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

**நியூவிக்ரேஸ்** 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7804.

# பருத்தித்துறை ஸ்ரீ சாரதாதேவி சேவாச்சிரம 10வது ஆண்டு விழா சிறப்பு மலர்

## அன்னையின் தூயபணியாற்றும் ஆச்சிரமம்

இன்று உலகு எங்குமிருக்கின்ற மக்கள் ஆன்மீகத்துறையிலே பெரிதும் ஈடுபாடு காட்டி வருவது பெருமைக்குரிய விடயமாகும். காலத்திற்குக் காலம் தோன்றிய மகான்கள் எமக்குக் காட்டிச் சென்ற "ஞானமார்க்கத்தை அம் மகான்களின் பெயர்களால் உருவாக்கப்பட்ட சமய நிறுவனங்கள் உலகத்தாருக்குப் போதித்து வருகின்றன.




தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையார் தமது பிள்ளைகளாகிய உலகத்து மக்களுக்குத் தூய வாழ்வின் பெருமையை உணர்த்தியுள்ளார். அம்மையாரின் பணியையும், சேவையையும் நினைநிறுத்தி வடமராட்சியில் அன்னையின் தூய பணியை ஆற்றும் முகமாக 1969-ம் ஆண்டு பருத்தித்துறையில் தூய அன்னையின் ஞானபீடமாக இச் ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் தொடக்கி வைக்கப்பட்டது. கடந்த பத்து வருடகாலமாக இச் சேவாச்சிரமம் ஆற்றிவரும் சமய, சமூகப்பணிகள் அன்னையின் மகிமையை எடுத்து இயம்பிக்கொண்டு இருக்கின்றன.

இந்த வருடத்தில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி, ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் ஜயந்தி விழாக்கள் மிகவும் சிறப்பாக இவ் ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டன. இலங்கையின் பல பகுதிகளிலும் பல சமயப் பிரசாரங்களையும் இது மேற்கொண்டுள்ளது.

தற்பொழுது குறிப்பாக யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றில் சமயவகுப்புகளையும், பஜனை நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருகின்றோம்.

அகில இலங்கை ரீதியாக தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியைப் பற்றிய கட்டுரைப் போட்டியை ஒவ்வொரு வருஷமும் நடாத்தி, மாவட்ட ரீதியில் பரிசில்கள் வழங்கிவருகிறோம்.

இங்கு சிறுவர்களுக்கு போயாதினத்தில் சமய வகுப்பும் பெரியவர்களுக்கு அருளுரையும் நிகழ்த்திவந்தன.

**தூய அன்னையின் உருவச்சிலை**

திரு. வி. நாகரத்தினம் உரிமையாளர் (குகன்

[7ம் பக்கம் பார்க்க]

பிர. இரத்தினசபாபதி
(பரு. ஸ்ரீ சாரதா சேவாச்சிரம பொதுச் செயலாளர்)

### ஸ்ரீ சாரதா தேவி ஸ்தோத்ரம்

புரிகவருள் நினைவணங்கும் புதல்வர்க்கே பெருந்தேவி
தருகசரண் தாவிணையிற் கருணைமலி வளமிருவனே
ஞானமருள் சாரதையே நானுடுத்தாய் சற்றதமும்
ஈனமறுத் தெமைக்காப்பாய் இறைஞ்சுவன்யான்
கருணைமயி
இராமகிருஷ்ணர் சாருவீரசாய் இன்பொடகேட்
டும் விழைவோய்
பராவுநல மிழ்வடிவோர் பணிகுவன்யான் பலகாலும்
தூய்மைபெறு சரிதையினாய் தூய்மைபெரு
வாழ்க்கையினாய்
தூய்மையொரு வடிவானாய் தொழுதுவம்யாம்
தொழுவோமே.

-ஸ்ரீமத் சுவாமி அபேதானந்தர்

## ஸ்ரீ சாரதாதேவியின் தியாக புத்தி !

-சுவாமி சித்பவானந்தர்-

தென்னிந்தியாவின் ஆலயங்களின் கர்ப்பகிருஹத்துக்குள் அர்ச்சகரைத் தவிர பிறர் போகலாகாது என்பது ஐதீகம்; ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருக்கு வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்த அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் ஒருவர் மட்டும் உள்ளே சென்று தாமே அர்ச்சிக்கலாமென்று அனுமதிக்கப்பட்டார். இவ்விதமே அவரும் மூன்று நாள் ராமேசுவர பூஜையைத் தாமே செய்தார், க்ஷேத்திரத்தில் இருக்கும் ராமநாதபுரம் ராஜாவின் அரண்மனையைப் பார்க்கவேண்டுமென அன்னையார் வேண்டிக்கொள்ளப்பட்டார். அதற்கு இசைந்த அவரும் அம் மாளிகையைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அங்கு வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த ரத்தினங்களும் நகைகளும் அவருக்குக் காட்டப்பட்டன. அரண்மனை அதிகாரிகளின் வேண்டுகோள் அத்துடன் நின்றுவிடவில்லை. அந்த விலையுயர்ந்த ஆபரணங்களில் இஷ்டமானவைகளை அன்னையார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ராஜா விண்ணப்பம் செய்திருக்கிறார் என்று உத்தியோகத்தர் பணிவுடன் தெரிவித்தார். இவ் வேண்டுகோள் அன்னையாரை ஒரு நெருக்கடியான நிலையில் வைத்தது. தியாகபுத்தியிலும், அபரிக்கிரக விரதத்திலும் குருதேவருக்குப் பின்வாங்காத ஞானத்தாய், இவைபோன்ற பொருட்களை ஏற்றுக்கொள்ள எங்ஙனம் இசைவார்? ஆனால் நேர்முகமாக வேண்டாமென்று மறுத்து அவர்களுடைய மனதைப் புண்படுத்துவது முறையன்று. ஆதலால் ஓர் உபாயத்தைக் கையாண்டார். "உலகத்தவர் போற்றும் நகைகளை வைத்துக்கொண்டு நான் என் செய்வேன். ஏதேனும் ஓர் அணியை ராதை எடுத்துக்கொள்ளட்டும் என்று கட்டளையிட்டார், ராதை எனும் சிறுமி அன்னையாரின் தம்பி ஒருவருடைய புதல்வி ஆதலால் இந்த ஏற்பாடு உத்தியோகத்தருக்கும் உடன்பாடாயிற்று ஒளிவீசுகின்ற வைரம் முதலியன இழைக்கப்பெற்ற ஆபரணங்களை ராதை கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில் குருதேவரை நினைந்து, "இறைவா, இக் கன்னியின் உள்ளத்தினின்று இந் நகைகளின் மீதுள்ள ஆசைகளையெல்லாம் அகற்றிவிடும்," என்று அன்னையார் ஆவலுடன் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார், அதுபோழ்து அவளுடைய உள்ளம் உலகப் பொருள்களை ஏற்கலாகாதென்று கடு தடுங்கிற்று அக் குமரியும் கடைசியாக "இவைகளில் ஒன்றும் எனக்குவேண்டாம். இப்பொழுதுதான் எழுதுகோல் ஒன்றை இழந்துவிட்டேன். அதற்குப் பதிலாக வேறு பென்சில் ஒன்று எனக்கு வாங்கிக்

[7ம் பக்கம் பார்க்க]

## இல்லறத்தில் துறவறம் பேணிய அம்மை

சுவாமி சர்வாதித்தானந்தர்
(ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு)

கடவுளைக் காணுதல் ஒன்றே பிறவிப்பயனென ஸ்ரீராமகிருஷ்ணர் அன்னைக்கு எடுத்துச் சொன்னார். கடவுள் பக்திபூணுநம் உலகத்தவர் கட்குத் தம் கடமைகளை நிரந்தரமாகச் செய்தல் முதலியவற்றை தம் துணைவியாருக்குப் புகட்டினார். ஸ்ரீ இராமகிருஷ்ணர். அதன்படியே சாரதாதேவியாரும் வாழ்க்கையை நடத்தினார். வாழ்க்கையின் இலட்சியம் எதுவாய் இருப்பினும் அதைக் கடைப்பிடிக்கும் இல்லறத்தவர் இருவராது கருத்தும் ஒருமித்து இருந்தால் ஒழிய பெருநன்மை பிறவாது. கணவர் பூண்ட தவநெறியை கடைப்பிடித்து வந்தார் அம்மையார். "என் உள்ளத்தை உலகமே நாடுகின்றது, உவந்தளித்துவிட்டேன், ஆதலால் உடல் இன்பத்திற்கு அது உடன்படுவதில்லை. ஆயினும் வேதவிதிப்படி உன்னை மணந்த நான், உனது இச்சா சுதந்திரத்தைப் பூர்த்திசெய்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உன் கருத்தை ஒழியாது வெளியிடு' என்று கேட்டார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

சாரதாதேவியார்; "தேவே! தமக்குகந்த திருத்தொண்டு புரிந்துவோருக்கு உரியவளாகி உய்தற்பொருட்டு இங்கு

(7-ம் பக்கம் பார்க்க)

### ஆசிச்செய்தி

கல்கத்தா ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், மடத்துத் தலைவர் வணக்கத்துக்குரிய ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தர் ஆசியுடன் 23-6-1970ல் பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அப்பொழுது சுவாமி அவர்கள் அனுப்பிய ஆசிச்செய்தி:

"ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் அன்னையின் திருவுருவச்சிலையை நிறுவுவது கேட்டு மிக்க மகிழ்ச்சி. அன்னையின் அவதாரம் பெண்களிடையே ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது இவ்வைபவம் சிறப்பாக நடக்கவும் அன்னையாருடைய செய்தி இலங்கை முழுவதும் ஸ்ரீ சாரதா சேவாசிரமத்தின் மூலம் பரவவும் வேண்டுகின்றேன்"

### வாழ்த்துச்செய்தி:

"மட்டக்களப்பிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஆஸ்ரமத்திற்கும் அதன் கீழ் இயங்கி வரும் குருகுலங்களுக்கும் (அனாதை இல்லம்) பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம், பலவகையிலும் தனது உதவியைத் தாராளமாகத் தொடர்ந்து நல்கிவருகின்றது. இவ்வாஸ்ரமம் மேற்கொண்டுள்ள சமய, சமூக, சமுதாய தொண்டுகளை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம். இதன் நிர்வாகக் குழுவினருக்கு எமது நன்றி உரித்தாகுக.

"மேற்படி சேவாஸ்ரமம் மேற்கொண்டுள்ள சேவைகள் மென்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்",

-ஸ்ரீமத் சுவாமி
ஜீவனானந்தர்
(மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன்)

### நன்றி

இம்மலர் வெளியிடுவதற்கு உதவிய பருத்தித்துறை வாழ் அன்பர்கள்:

0 குமாரவேல் அன் சன்ஸ்
0 கமலா அன் பிரதர்ஸ்
0 திரு. மூ. பொ. வீரவாகு
0 திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை (கணக்காளர்)
0 திரு.க.கணேசன்
0 கலாவதி நகைமாளிகை

### பரு. நீதவான் வாழ்த்துகிறார்!

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் ஆத்மீகப் பணியை மிகவும் ஈடுபாட்டுடன் கவனித்துவந்துள்ளேன் இப்பணியினால் பலர் நன்மை பெற வேண்டுமென்பதே எனது பேரவா.

-க. ஞானச்சந்திரன்.
(பரு நீதவான்)

### இலவசம்!

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பி. ப. 6-30-க்கு நடைபெறும் இராமகிருஷ்ணரின் இலவச படக்காட்சிக்கு ஆச்சிரமத்தின் அனுமதிப் பத்திரம் பெற்றவர்களே அனுமதிக்கப்படுவர்.

### பருத்தித்துறை ஆஸ்ரமத்துக்கு வருகைதந்த துறவிகள்

ஸ்ரீமத் சுவாமி அவ்யயானந்தா (தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம் காஞ்சிபுரம்), ஸ்ரீமத் சுவாமி விருபாக்ஷானந்தர் (ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், ஹைதராபாத்), ஸ்ரீமத்சுவாமி முக்யானந்தர் (ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், வேலூர் கல்கத்தா), ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தர் (முகாமையாளர், ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், மட்டக்களப்பு), ஸ்ரீமத்சுவாமி சமகிரானந்தா (ஸ்ரீராமகிருஷ்ணமிஷன், கொழும்பு), ஸ்ரீமத்சுவாமி சாந்தானந்தர் (இந்தியா)

# கீழைத்தேசப்பண்பாட்டினை மேலைத்தேசத்துக்குவிளக்கிய இலங்கைப் பெருமகன்



கீழைத்தேச கலை - பண்பாடுகளின் பெருமைகளை மேலைநாட்டவர்களுக்கு விளங்கவைத்த இலங்கையின் பெருமைக்குரிய பெருமகனார் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்களின் 32 வது மறைவுதினம் இன்றாகும். 1877ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் திகதி அவதரித்த அப்பெரியாரின் சுயவரலாற்றினை இங்கு சுருக்கமாகத் தருகின்றார் வரலாற்றுவாணர் — முத்துக்குமாரசுவாமி.

## தமிழாக்கம்: வரலாற்றுவாணர் வை. முத்துக்குமாரசுவாமி

பண்பாட்டுத் துறையில் தேசிய வாதியும் கீழைத் தேசப் பண்பாட்டினை மேல் நாடுகளுக்கும் விளக்கியவருமாகிய கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் தலை சிறந்தவர். உலகப் பல்வேறு தேச மக்களால் நன்கு அறியப்பட்ட இச்சான்றோர் புதிய சகாப்தத்தின் தீர்க்கதரிசியாவர்.

அன்னார், ஆசியாவின் முதன் முதல் 'தமிழ்' என்னும் வீரப் பிரபுப் பட்டத்தினைப்பெற்ற சேர் முத்துக்குமாரசுவாமி அவர்களின் அருந்தவப் புதல்வர். அவர் இலங்கைச்சட்ட சபையில் முதலாவது தமிழரின் பிரதிநிதியாக விளங்கிய குமாரசுவாமி முதலியாரின் பேரன் ஆவர். ஆனந்தகுமாரசுவாமியின் தாயார் ஆங்கில நாட்டின் மாவட்டங்களில் ஒன்றாகிய கென்ரில் வசித்துவந்த உயர்குடி வழியில் வந்த எலிசபெத்கிளே பீபி என்பவராகும். ஆனந்தர் 1877-ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் திகதி கொழும்பிலே, மூன்றும் வட்டாரமாகிய கொள்ளுப்பிட்டியிலே, றைலண்வாலண்ட்பிளேஸ் என்னும் வீதியில் உள்ள றைன்வான்ட் என்னும் இல்லத்தில் பிறந்தார். 1878ம் ஆண்டு ஏப்ரல் மாதம், அவருடைய தாயார், முத்துக்குமாரசுவாமி சீமாட்டியார் அவர் எட்டு மாதக் குழந்தையாக இருக்கும் பொழுது இவரைச் சுகவீனம் காரணமாக இங்கிலாந்துக்குக் கொண்டு சென்றார். ஆனந்தர் இரண்டுவயதுக் குழந்தையாக இருக்கும் பொழுது இவருடைய தந்தையார் 1879-ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி இங்கிலாந்துக்குப் புறப்பட எல்லா ஆயத்தங்களையும் செய்துகொண்டிருக்கும் சமயத்திலே அவரது 45வது வயதினில் காத்திரமான பிரகாசமாக ஒரு வியாதியால் (Bright's-Disease) மறைந்தனர்.

### கல்வி

ஆனந்தகுமாரசுவாமியின் தாயார் இங்கிலாந்தில் வாழ்ந்துவந்தார். ஆகவே இவர் தமது 12-வது ஆண்டில் 1889ம் ஆண்டில் முதலாவதாக குளொசெஸ்ரர் மாவட்டத்தில் உள்ள விக்கிளிஃப் கல்லூரியில் கல்வி கற்கத் தொடங்கினார். அங்கு 1895ம் ஆண்டுவரை கல்வி பயின்றார். 1897ல் அக்கல்லூரியின் உதைபந்தாட்டக்கோஷ்டித் தலைவராக (கப்டினாக) விளங்கினார். அவர் அக்கல்லூரியிலிருந்து இலண்டன் மற்றிக்குலேஷன் என்னும் பொதுக்கல்வித் தராதரப் பரீட்சையில் சித்தி எய்தினார். இவர் 1899ல் இலண்டன் இன்ரர்மீடியற் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் தாவர சாத்திரத்தில் சித்திபெற்றார். 1900ம் ஆண்டில் இலண்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான கலைத்தேர்வில் பூகர்ப்ப சாத்திரத்தின் பூகோளத்தினை முக்கிய பாடமாகவும் தாவர இயல் உபபாடமும் ஆக எடுத்து, அவற்றில் சிறப்புச் சித்தி எய்தினர். அதன்பின்னர் விஞ்ஞான கலாநிதி என்னும் முக்கிய பேற்றினைப் பெற்றார். பின்பு இலண்டன் பல்கலைக்கழகத்து போதனாசிரியர் கோஷ்டியின் கௌரவ விசேட உறுப்பினராகப்பட்டார் (Fellow).

### உத்தியோகம்

இவ்வாறு இலண்டனில் புகழ் ஒளிவீசி இருக்கின்ற பொழுது இலங்கை அரசாங்கத்தினர், 1903ம் ஆண்டு அவரை இலங்கைத் தாதுப் பொருட்கள் ஆய்வுத் திணைக்கள அதிபராக நியமனம் செய்தனர். மூன்று ஆண்டுகள் இலங்கைக் கனிப்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். கண்டி மாவட்டத்தில் முதலாவது பூகர்ப்ப படத்தினை ஆனந்த குமாரசுவாமி அவர்களே அமைத்தனர். 'தோறியனைற்' என்னும் உலோகத்தினை அவரே முதன் முதலாகக் கண்டுபிடித்தார். வேறு விஞ்ஞானியாயின், தமது பெயரைச் சேர்த்து அப் புதிய உலோகத்திற்குப் பெயர் வழங்கி இருப்பர். ஆனால் பேரறிஞர் ஆனந்தகுமாரசுவாமி அவ்வாறு செய்ய விரும்பவில்லை.

### பெரும்புலமை

1905ம் ஆண்டு ஆனந்த குமாரசுவாமி அவர்களை "டெயிலிநியூஸ்" என்னும் ஆங்கிலத் தினசரியில் 'கண்டி நாட்டுத் தலைவருக்கு விடுக்கப்பட்ட பகிரங்க கடிதம்' வெளிவந்தது. அதில் மேல்நாட்டுச் செல்வாக்கினால் கீழைத்தேச (கண்டிநாட்டுக்) கலைக்கு ஏற்பட்டுவரும் தீங்கினை சாங்கோபாங்கமாக எடுத்து உரைத்தார்.

ஆனந்த குமாரசுவாமி அவர்கள் டபிள்யூ. ஏ. டி. சில்வா அவர்கள் உதவியுடனும், எஃப் எல். வூட்வேட் அவர்கள் உதவியுடனும் 1905ல் இலங்கைத் தேசிய சஞ்சிகையை (Ceylon National Review) ஆங்கிலத்தில் தொடக்கி வைத்தார். அதில் தேசிய மொழிகளாகிய சிங்களம், தமிழ் ஆய்வுக் கட்டுரைகளுஞ் சேர்க்க குறிக்கோள் வைத்திருந்தனர். அவ்வாறு வெளியிடவில்லை. அதற்கு ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் 1905—1907 வரை பத்திரிகையாசிரியராக விளங்கினார். அச் சஞ்சிகையில் வெளிவந்த அன்னாரின் அரிய கட்டுரைகளும் பிறவும் [illegible] வன: (எமது தமிழாக்கங்கள் 'ஈழநாடு' ஞாயிறு ஏடுகளில் வெளிவந்தன:-

1. இரவின் இறகுகள் 1905, 2. இலங்கையில் இந்திய இசை கற்பித்தல் 1906, 3. இலங்கையும் இந்தியாவும் 1907, 4. இலங்கையும் சைவ உணவும் பெப்ரவரி 1909 [3-6-79] கிழக்கு நாடுகள் ஆங்கில மயமாகுதல். 6. இலங்கையில் கல்விமுறை 1911.

யாழ்ப்பாணத்திலே அதற்குக்கிளை ஒன்று 1912 நிறுவப்பட்டது. அதற்கு கோப்பாய் அம்பலவாணர் மயில்வாகனம் அவர்கள் தலைவராகவும், யாழ்ப்பாணம் ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை அவர்களும் வேறு சில பெரியார்களும் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் விளங்கினர்.

1906-ம் ஆண்டில் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 'கீழை நாடுகள் ஆங்கிலமயமாக்குதல்' என்னும் கட்டுரையை வெளியிட்டார். அதன் தமிழாக்கம் எம்மால் செய்யப்பட்டு அண்மையில் 'ஈழநாடு' ஞாயிறு மலரில், 17-6-79 அன்று வெளிவந்தது. மேலும் அன்னார் 'கண்டி நாட்டுக்கலைகளின் சிறப்பும் முடிவும்' 'இரண்டு கண்டிநாட்டுச் செப்புப்பெட்டிகள்' 'பண்டைச் சிங்களச் சித்திரப் பூத்தையல் வேலைகள்', 'இலங்கை ரப்பர் பொருட்காட்சிச்சாலையில் வைத்துள்ள கைப்பணிகளுக்கும் ஒரு திறவுகோல்' ஆகிய ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். இவை இலங்கை மறுமலர்ச்சியை உண்டுபண்ணும் பெற்றியாய்த்தன, இவை திட்டவட்டமாகவும் தெட்டத் தெளிவாகவும் எழுதப்பட்ட கட்டுரைகள்.

1906-ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகம் ஆனந்தகுமாரசுவாமி அவர்களுக்கு விஞ்ஞானக் கலாநிதி என்னும் பட்டத்தினை நல்கியது, அந்த ஆண்டுக்கடைசி மூன்றுமாதங்களில் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இந்தியாவின் வரலாற்று விலாசம்பெற்ற நகரங்களையும் தரிசித்தனர். ஆங்கு அவர் கண்ட இந்தியக் கலை வடிவங்களும், இலக்கியங்களும் அவர் இதயத்தைக் கவர்ந்தன, தமது முதற் காதலாகிய (உலோக நூல்) விஞ்ஞான அறிவு பெறுதலைக் கைவிட்டு விட்டு இந்திய கண்டத்தில் பல மூலை முடுக்குகளில் பரந்து கிடக்கும் கலைகளைப் பற்றியும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பல திக்குகளிலும் மறைந்து கிடக்கும் கலை விநோதங்களைப் பற்றியும் நுண்மாண் புலமையுடன் ஆராய ஆர்வம் மிக்கவரானார். ஆய்வுக்கட்டுரைகள் எழுதினார்.

1907-ம் ஆண்டு ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 'இந்தியாவும் இலங்கையும்' என்னும் நூலினையும் 'ஆங்கிலேயருக்கும் இந்தியருக்குமிடையேயுள்ள போராட்டத்தின் ஆழமான கருத்து' என்னும் நூலினையும் வெளியிட்டார்.

1908-ம் ஆண்டு தொடக்கம் ஆனந்த குமாரசுவாமி அவர்களும், அவர் மைத்துனர் பொன்னம்பலவர் அருணாசலம் அவர்களும், இலங்கை தேசிய சஞ்சிகை பத்திராதிபர் உட்வேட் அவர்களும் இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தினை ஒரு மன்றம் அமைத்துத்தொடக்கி வைத்தனர். அதே ஆண்டில் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 'இலங்கையில் தாவர போசன இயக்கம்' என்னும் நூலினையும், 'மத்திய சிங்களக் கலை' என்னும் தலைசிறந்த நூலினையும் இங்கிலாந்தில் அச்சடித்து வெளியிட்டார்.

'மத்திய சிங்களக் கலை' எனும் நூலில் 18-ம் நூற்றாண்டில் சிங்களக்கலை-அதன் சமூக- பொருளாதார நிலை-கம்மாளர் நிலை- அவர்கள் தொழிற்கல்வி-முதலிய அருமருந்தன்ன விடயங்களுக்கு விளக்கங்கள் தனி அத்தியாயங்களில் காண்பிக்கப்படுகின்றன. கட்டடக்கலை, கற்செதுக்கல், மரச்செதுக்கு உருவக்கலை அலங்காரச் சித்திரக்கலை, நெசவுக்கலை சரிகை, சித்திரப் பூவின்னுதல், களிமண் சித்திரக்கலை, தோல் சித்திரக்கலை, ஓலைகளினால் பாய், முதலியன செய்தல்-ஆகியவை சிறந்த இடம்பெறுகின்றன.

ஆனந்த குமாரசுவாமி அவர்கள் காடு படர்ந்துள்ள குகைகளுக்குள் சென்று அங்கு ஓரளவு அழிந்த நிலையிலும் அழியாமலும் காணப்பட்ட கல்லுச் சித்திரங்களையும் ஓவியங்களையும் கண்ணுற்று அவற்றைப்பற்றிய குறிப்புக்களைச் சேகரித்தனர். இலங்கைக் கலை, பண்பாடு, சமயம்-என்பவற்றில் பின்னிப்பிணைந்துள்ள தொடர்புகளை உய்த்துணர்ந்து இவற்றைக் கோவையாக்கி, தாம் கண்ட இன்பம் வையகம் எல்லாம் பெறவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கினால் உந்தப்பெற்று தலைசிறந்த நூலை வெளியிட்டார்.

1908-ம் ஆண்டுக்கு முன் ஈழநாட்டுக் கலைகளின் சிறப்பை உலகிற்கு எடுத்துச் சாற்றியவர் ஒருவருமில்லை.

(இன்னும் வரும்)

---

## குறும்பாய் நகைத்தான் அவன் வாழி!

குன்றிற் பிறந்தே வெள்ளருவி
குதித்துக் குதித்தே கீழ் ஓட
நின்றும் அதனை நான் நோக்கி
நிலைத்தே மகிழ்ந்தேன் என் தோழி
நின்றங்கதனை நான் நோக்கி
நிலைத்தே மகிழ அன்னவனோடு
கொன்றே விடுவான் போல் நோக்கிக்
குறும்பாய் நகைத்தான் அவன்வாழி

சோலை மலரில் வண்டொன்று
தேனை அருந்தி மது வெறியில்
சால அதன் மேல் துயில்வதினைத்
தரைமேற் பார்த்து நான் நின்றேன்
சால அதன்மேல் துயில் வதினைத்
தரைமேற் பார்த்து நான் நிற்பக்
'கோல மயிலே வா' வென்று
குறும்பாய் அழைத்தான் அவன் வாழி

கிளிகள் இரண்டோ ஆவலினால்
"கீச்கீச்" என்றே ஒலி எழுப்பிக்
கொஞ்சி இன்பம் காணுமொரு
கோலம் நோக்கி நான் நின்றேன்
கொஞ்சி இன்பம் காணுமொரு
கோலம் நோக்கி நான் நிற்ப
அள்ளி அணைப்பான் போல் வந்தே
"அன்பே" என்றான் அவன் வாழி

வானம் சிரித்த சிரிப்பாகி
வையம் எங்கும் மழை தூற
நானும் அதனை நனி நோக்கி
நகைவாய் மகிழ்ந்தே நின்றிட்டேன்
நானும் அதனை நனி நோக்கி
நகைவாய் மகிழ்ந்தே நிற்கையிலே
தானே வந்தென் கரம் பற்றித்
தரைமேல் மகிழ்ந்தான் வாழியவே!

-புலவர் ம. பார்வதிநாதசிவம்-

# 'வேலை நிறுத்த உரிமையை முறியடிக்கசட்டம்வருகிறது'

## எதிர்க்கட்சித் தலைவர் கவலை

[யாழ்ப்பாணம்]

தொழிற்சங்கங்கள் நூற்றாண்டு காலம் போராடிப் பெற்ற வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை, முறியடிக்க சட்டம் வருகிறது இந் நாட்டு தொழிலாளர் வர்க்கத்தை முற்றுமுழுதாக பாதிக்கப் போகிறது,

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த எழுதுவினைஞர் சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் திரு. திருச்செல்வம் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

கடந்த அரசு அவசரகாலத்தை நிரந்தர அவசரகாலமாக்கி 71 முதல் 77 வரை தொழிலாளர், தனிமனித உரிமைகளைப் பறித்தது.

### சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது

இந்த அரசு அவசரகாலச் சட்டத்தை கொண்டுவரமாட்டோம் என்றது. சூறாவளியின் பின் கிழக்கில் அவசரகாலச் சட்டத்தை கொண்டுவந்தது. இப்போ யாழ் மாவட்டத்தில் கொண்டுவந்துள்ளது. தனிமனித சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது

### நிரந்தரமாக உரிமைகளைப் பறிக்கிறது

நிரந்தரமாக உரிமைகளைப் பறிக்க வேறுசில சட்டங்களை கொண்டுவர இருக்கிறது.

பயங்கரவாத ஒழிப்புச் சட்டம், யாழ் மாவட்டத்திற்கு மாத்திரமல்ல, அது இலங்கை முழுவதற்குமே. இந்த சட்டத்தின் கீழ், பத்திரிகைத் தணிக்கை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.

தற்போ அவசரகாலச் சட்டம் இல்லாவிட்டாலும், பத்திரிகை தணிக்கை இருக்கிறது. யாரையும் கைது செய்யலாம்; பலநாட்கள் தடுத்துவைத்திருக்கலாம்.

அத்தியாவசிய சேவைச்சட்டம் வருகிறது. வேலைநிறுத்தம் செய்யும் உரிமை கிடையாது.

அரசாங்க சார்பில் ஜாதிக சேவா சங்கம் ஒன்று இயங்குகிறது. பாலுக்குத் தோழன், பூனைக்கும் காவல் என்பது போல, இச் சங்கம் இருக்கிறது. இச் சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கு பதவிஉயர்வு, சம்பள உயர்வு கிடைக்கிறது தொழிலாளரின் கட்டுக்கோப்பை உடைத்து தொழிற் சங்கங்களை பலமிழக்கச்செய்கிறது!

பல வருடங்கள் போராடிப் பெற்ற உரிமைகள், மெல்ல மெல்ல பறிபோய்க்கொண்டிருக்கிறது. [ச-இ]

## 372 முதலாளிகள் இணக்கம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று இதுவரை 872 சுருட்டு முதலாளிகள், 1,000 சுருட்டுகளுக்குக் கூலியாக 37 ரூபா 50 சதம் வழங்க முடிவுசெய்துள்ளனர். இது தொடர்பான பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 5ந் திகதி முதல் சுருட்டுத்தொழிலாளர்கள் வேலைகளைப் பகிஷ்கரிப்பதை விடுத்து வேலைக்குச் சென்றுள்ளனர்.

இதுவரை முன்னைய கூலியிலிருந்து 5 ரூபா அதிகமாக வழங்க முன்வராத 15 முதலாளிகளும் விரைவில் வழங்குவார்களென்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக மேற்படி சங்கத் தலைவர் திரு. க. துரைராஜசிங்கம் தெரிவித்தார். [கே-இ]

## நாவலர் நூற்றாண்டு விழா: மானிப்பாயில் இன்று கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

நாவலர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கருத்தரங்கொன்றை நடாத்தவுள்ளனர்.

இந்துசமய விருத்திச் சங்கத் தலைவர் முதலியார் வை. மகேசனின் வரவேற்புரையுடன் கருத்தரங்கு ஆரம்பமாகும்.

காலை சித்தாந்தச் செம்மல் பண்டிதர் மு. கந்தையா தலைமையில் "கோயிற் பூசைகளும் வழிபாடும், என்னும் பொருள் பற்றி திரு. வி. சொக்கலிங்கம், திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

அடுத்து இளைப்பாறிய யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் தலைமையில் 'சைவக் கோவில்களும் திருமண வைபவங்களும்' என்னும் பொருள் பற்றி கவிஞர் செ. கதிரேசபிள்ளை, திரு. அ. பஞ்சாட்சரம் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

பிற்பகல் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் 'சைவமும் இளையசந்ததியும்' என்னும் பொருள் பற்றி கவிமணி வி. கந்தவனமும், திரு. நா. சுப்பிரமணியம் ஆகியோரும் கருத்துரை வழங்குவர் [கே-இ]

## ஆனையிறவு தமிழ்ப் பாடசாலையில் சிங்களப் பிரிவு

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவில் உள்ள தமிழ்ப் பாடசாலை ஒன்றில் சிங்களப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு உப்பளத்திற்கு அண்மையில் உள்ள தமிழ்ப் பாடசாலையிலேயே சிங்களப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் ஊழியர்களின் பிள்ளைகள் சிங்களம் கற்பதற்கு வசதிசெய்துகொடுக்கு முகமாக யாழ் மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைவர் பிரிகேடியர் வீரதுங்கா வடபகுதி கல்விப் பணிப்பாளர் திரு. ரி. மாணிக்கவாசகரைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி பாடசாலையில் சிங்களப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

சிங்களப் பிரிவை மாவட்டக் கல்வி அதிகாரி திரு. எச். ஆரியதாசா பெரேரா ஆரம்பித்துவைத்தார். [கே-இ]

## அத்தியாவசிய சேவைகள் சட்டமூலம் சபையில்

[கொழும்பு]

உணவுப்பொருள் எரிபொருள், மின்சார விநியோகம், போக்குவரத்து, நீர் விநியோகம், தபால் தந்திச் சேவை, ஒலிபரப்பு, நோயாளரைப் பராமரித்தல் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளுக்கு அத்தியாவசியசேவைகளாக்கும்பொது சேவைசட்ட மூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச் சட்டத்தை மீறுபவர்களும் தடையாக நிற்பவர்களும் இச் சட்டத்தை மீற உடந்தையாக இருப்பவர்களும் 5 வருடத்திற்கு மேற்பட்ட சிறைத்தண்டனையும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதமும் விதிக்கப்படும். அத்துடன் சொத்துக்களும் பறிமுதல்செய்யப்படும்.

## இந்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருடம் டிசம்பர் இறுதிக்குள் தேர்தல் நடைபெற்றேதீரும். தேர்தல் நடைபெறுவதில் சிறிது தாமதம் ஏற்பட்டாலும் ஜனவரி 4ம் திகதிக்கு மேல் தேர்தல் நடைபெறுவது ஒத்திவைக்கப்படமாட்டாது.

மேற்கண்டவாறு இந்திய மத்திய சட்ட அமைச்சர் திரு. சக்கர் அகமதாபாத்தில் நிருபர்களிடம் கூறினார்.

இதேவேளையில் எவ்வாறெனினும் இடைக்காலத்தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது என இந்திய தலைமை தேர்தல் கமிஷனர் திரு. எஸ். என். எல். சக்தரும் கூறியுள்ளார்.

## கொள்ளை-வழிப்பறிகளில் சம்பந்தம்?

# 33 இளைஞர்கள் கைதாகி விசாரணை

### வீதிகளில் வீண் அரட்டையில் ஈடுபட்டவர்களும் சிக்கினர்

[யாழ்ப்பாணம்]

கொள்ளை வழிப்பறி களவுச் சம்பவங்களிலும் வேறு பல சம்பவங்களிலும் ஈடுபட்டவர்களெனச் சந்தேகிக்கப்படும் முப்பத்திமூன்று இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். தலைமைப்பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சந்திரா பெரேரா தலைமையில் சென்ற பொலிசாரே முப்பத்திமூன்று இளைஞர்களையும் கைதுசெய்தனர்.

கொள்ளை, களவு, வழிப்பறிச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களெனச் சந்தேகிக்கப்படும் இவ்விளைஞர்களை இராசாவின் தோட்டம், வைமன் வீதி, அத்தியடி, கல்வியங்காடு, ஓட்டுமடம் ஆகிய இடங்களில் வைத்துப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

பொது இடங்களிலும், சந்திகளிலும் அரட்டை அடித்துக்கொண்டு நின்ற இளைஞர்கள் சிலரும், சந்திகளில் நின்று பெண்களைக் கிண்டல்செய்த இளைஞர்கள் சிலரும் கூடப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்

சந்திகளில் நின்று வீண் பொழுது போக்குபவர்கள் மீதும், பெண் பிள்ளைகளைக் கிண்டல் செய்யும் இளைஞர்கள் மீதும் பொலிசார் தீவிர கவனம்செலுத்தி வருகின்றனர். (கொ)

WANTED

For Reception Office male & female Reception staff with advance level in the English medium & with experience in Hotelworks Salary Rs. 400/ and other allowance. Apply Palm Court, Main Street, Jaffna. 3546

## வீடு திரும்புகையில்

# கான்ஸ்டபிள் வழிமறித்து தாக்கப்பட்டாராம்

[யாழ்ப்பாணம்]

வேலைமுடிந்து வீட்டிற்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வீதியில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டாராம்.

இச்சம்பவம் காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் பத்மநாதன் நேற்றுமுன்தினம் இரவு கடமை முடிந்து காங்கேசன்துறையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில் வழி மறித்துத் தாக்கப்பட்டாராம். இவர் உடனடியாக காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார். யாழ். பொலிஸ் அதிபர் இன்ஸ்லி விக்கிரமசூரியாவுக்கும் அறிவித்துள்ளார்.

கான்ஸ்டபிள் தமது புகாரில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து கடமை முடிந்து காங்கேசன்துறையிலுள்ள எனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கையில் புஸ்பராசா என்பவர் என்னைத் தாக்கியதுடன் நான் அணிந்திருந்த கோல உடையையும் கிழித்துச் சேதப்படுத்தினார்.

சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளார். பொலிசார் சந்தேக நபரைக் கைதுசெய்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவர் வழிப்பறிக்கொள்ளை ஒன்றில் சம்பந்தப்பட்டவர் என்று பொலிசார் கருதுகின்றனர். [கொ]

சகலவிதமான

எலெக்ரேனிக் வாச் பற்றறிகள்

Electronic Watch Batteries

விற்பனைக்குண்டு:-

நியூவிக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7804.

## மரண அறிவித்தல்

### க. கணபதிப்பிள்ளை

நெடுந்தீவைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் கணபதிப்பிள்ளை காலமானார். இவர் சிவகாமியம்மாவின் அன்புக்கணவரும், சுவாமிநாதன், வைத்தியகலாநிதி கோமளேஸ்வரி (இங்கிலாந்து) கனகாம்பிகை (ஆசிரியை) கைலாசநாதன, யோநாதன், ஆகியோரின் அன்புத் தந்தையும் வைத்தியகலாநிதி புவனராசா (இங்கிலாந்து) கணேசமூர்த்தி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரது ஈமைச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கணேசமூர்த்தி, பிள்ளையார்கோவிலடி, வசாவிளான். 3547

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டுமாதம் செப்டம்பர் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49; Telegeram Eelanadu, T. Phone 389.